# நல்ல மனது

"ஆயிரம் பொய் சொல்லியாயினும் காதலர்களைச் சேர்த்து வைத்துக் கல்யாணம் செய்விக்கணும்!" என்று ஒரு முதுமொழி கூறுவதை சாம்பு அறியாரா? நன்றாக அறிவார். சில நேர்த்தியான ஜோடிகளைக் கூட்டி வைத்து, கல்யாணம் ஆகாத பெண்களுக்கு 'வரன்' குதிரவைத்து, கல்யாணம் செய்து கொள்ள விரும்பாத பையன்களுக்குப் போதனை செய்து பெண்பார்த்து முடிச்சும் போடவைத்து, மகத்தான புண்ணியம் கட்டிக்கொண்டார். ஆனால்.... ஆனால்..... ஒரு ஜோடிப் புறாபோல இருக்க ஒரு தம்பதிகளை பிரித்து வைத்துவிட்ட பாவத்தைக் கட்டிக் கொண்டுவிட்டாரே - இந்தப் பரிதாபத்தை யாரிடம் சொல்லியழுவார்? ஒரு கலசப் பாலிலே சிறு துளி நஞ்சு விழுந்தாலும், பால் கெட்டது தானே? யார் மதிப்பார் சாம்புவை?

"அப்பா ராஜு! சௌக்கியம்தானே!" என்று குசலம் விசாரித்துக் கொண்டே ராஜராமன் விட்டுக்கு வந்தார் சாம்பு.

"ஓ, மாமா.... வாங்கோ, உட்காருங்கோ!" "என்று உபசரித்தான் ராஜாராமன்; அவரை உட்கார்த்தினான். உள்ளே புன்னகையுடன் போனவன், புன்னகை விரிய மனைவி பின் தொடர வந்தான். பயபக்தியுடன் அவனுடைய இளம் மனையாள் சியாமளா, பெரியவருக்கு நமஸ்காரம் செய்தாள். சாம்பு அவர்களைப் பார்த்து உள்ளங்குளிர்ந்தார்.

"ஏம்மா - உனக்கு ஏதாவது காரியம் இருக்குமா இப்போ?" என்றார்.

"இல்லையே . . . ஏன், சொல்லுங்கோ . . ." என்று லளிதமாகக் கேட்டாள் சியாமளா.

"ஒரு இரண்டு பாட்டுப் பாடிக் காண்பியேன்! . . . கல்யாணத்தின்போது சரியாகக் கேட்க முடியல்லை! தினமும் பாடிண்டு இருக்கயோல்லியோ?" என்று கேட்டார்.

"உம், சாதகம்னு செய்யாட்டாலும் பாடுகிறதை விட்டுவிடவில்லை. பாடுவேன் - தினமும் அரைமணியாவது," என்றாள் சியாமளா.

"சரி . . . உம், பாடு. வீணையைக் கொண்டுவா! ஏனப்பா ராஜு, நீயும் அவள் பாடுகிறதுலே அக்கரை வச்சுயிருக்கயோல்லியோ?" என்று ராஜுவைப் பார்த்து சாம்பு பேசத் திரும்பினார்.

சியாமளா வீணையை எடுத்துக் கொண்டு எதிரே பாயின்மேல் உட்கார்ந்து கொண்டாள். லாவகமாக விரல்களை மீட்டிய வண்ணம், தந்திகளை ஒலிக்கச் செய்து, இனிமையாக இழைந்து பண் இசைத்தாள்_. சாம்பு இசையை ஆனந்தமாக ரசித்தார். தம்முடைய நரைத்த தலையின் மேலே ஆங்காங்கு கருமயிர்கள் இருப்பதை எப்போதும் அவர் எவ்வளவு உவகையுடன் ரசிப்பது வழக்கமோ - அதைவிட அதிக உவகையுடன், பரவசத்துடன், சியாமளாவின் பண்ணிசைப்பிலே காணப்பட்ட மெருகுகளையும் அழகிய குழைவுகளையும் ரசித்தார்.

பாட்டு முடிந்தது. "பேஷாயிருக்கம்மா-பேஷாயிருக்கு உன் பாட்டு!" என்றார் சாம்பு.

"என்னவோ..... இதெல்லாம் என்ன உசத்தி மாமா! எல்லோரும் . . . எத்தனைபேர் இந்த நாளிலே எத்தனை பிரமாதமாப் பாடுகிறார்களே!" என்றாள் சியாமளா.

"உன் பாட்டோட பெருமை உனக்குத் தெரியாதும்மா! நன்றாயிருக்கு. உண்மையைச் சொல்கிறேன்!" என்றார் சாம்பு.

"இதோ பாருங்கோ . . . அவர் என் பாட்டைக் கேட்டுச் சோர்ந்து போய்விட்டார் போலிருக்கு. உங்களுக்கும் தலைவலி வந்துவிடுமோ என்னமோ... இருங்கோ.... காப்பி

கொண்டு வரேன்!" என்று சிரித்துக்கொண்டே சொல்லிவிட்டு சமையலறை நோக்கிப் பாய்ந்தாள் சியாமளா.

"ஏம்பா ராஜு! சியாமளா ஒரு இரண்டோ, நாலோ பாட்டு 'ரிகார்டு' கொடுக்கும்படி நான் ஏற்பாடு பண்ணறேன் - என்ன சொல்றே?" என்று சாம்பு ராஜுவின் பக்கம் திரும்பினார் பேச்சுக்கு.

"எதற்கு மாமா . . . அந்த 'இதெல்லாம்.....?' என்று இழுத்தாற்போல கூறினான் ராஜாராமன். அவருடைய ஊக்கங் காட்டும் பேச்சுக்கு அவன் ஊக்கங் கொடுக்கவில்லை, ஊக்கங்காட்டவுமில்லை.

"என்னப்பா அப்படிச் சொல்லிவிட்டாயே! யார் யாரோ பெரிய வித்வான்கள், வித்வாம்ஸிகள் 'ரிகார்டு' கொடுக்கிறது ஒரு பக்கமிருக்கட்டும், 'அமெச்சூர்ஸ்' கூட கொடுக்கிறார்களப்பா - கொள்ளைப் பேர்! எனக்கு ஏற்பாடு பண்ணித்தர முடியும், சியாமளாவும் கொடுக்க!" என்றார் சாம்பு கம்பீரமாக.

சிறிது பொறுத்து சியாமளா காப்பியுடன் வந்தபோது அவளிடமும் சொன்னார் சாம்பு. சமையலறையிலிருந்தே இவர்களுடைய சம்பாஷணையைக் கவனித்திருந்தாள் சியாமளா. அவளும் கணவனுடைய அபிப்பிராயத்திற்கு அனுசரணையாக, "பார்த்ததுக்கலாம் மாமா அப்புறம் எப்பவாவது! நானும் பாட்டை நன்றாய் விருத்தி பண்ணிக்கிறேன்!" என்றாள் அவள்.

"முதல்லே இதுபோல ஒரு அடி எடுத்து வச்சுட்டா, எட்டா போட்டியாக விருவிருன்னு விருத்திபண்ணிக்க ஆவேசம் இருக்கும் அம்மா! இப்போ உன் பாட்டும் சோடை போகாது! ராக, ஸ்வரம். நிரவல் எல்லாம் ஜோராயிருக்கு!' என்றார் சாம்பு.

"இருக்கட்டும் மாமா . . . இன்னும் நன்னா அப்பியாசம் பண்ணினால், முதல் ரிகார்டே தூக்கியடிக்கும்!. கிளர்ச்சி உண்டுபண்ணும்! ரேடியோவிலே பாடறதுக்குச் சான்ஸ் முதல்லே ஏற்படுத்திண்டால் அதுவும் நல்லதுதானே!" என்றாள்.

"சரியம்மா, உன் இஷ்டம்! பாட்டு நன்றாக சாதகம் பண்ணிண்டேயிரு! விட்டுவிடாதே!" என்று எச்சரித்து விட்டுப்போனார் சாம்பு.

அவர் போன பின்பு சியாமளா ராஜுவைப் பார்த்தாள். அவன் ஏதோ யோசனையில் இருப்பதைக் கண்ணுற்றாள். "எனக்கு அவ்வளவு அதிர்ஷ்டமா? 'மனைவிக்கு அவ்வளவு யோக்கியதையா'? என்று ஆலோசனைப் போலிருக்கு!" என்றாள் நகைத்துக்கொண்டே.

"எது யோக்கியதையோ - எது அதிர்ஷ்டமோ எனக்கெல்லாம் ஒண்ணும் தெரியாதுடியம்மா! பெண்களுக்குத்தான் இப்படிப்பட்ட ஆராய்ச்சியெல்லாம் பண்ணத்தோன்றும்!" என்றான் ராஜாராமன். அவன் முகத்திலோ பேச்சிலோ ஒருவித உணர்ச்சியும் புலப்படவில்லை.

சில மாதங்கள் உருண்டு சென்றன. பிறந்தகம் வந்திருந்த சியாமளா, சாம்புவைப் பிறந்தகத்திலே ஒரு நாள் சந்தித்தாள். இந்த விசைச் சந்திப்பு குறிப்பிடத்தக்கதாக இருந்தது. அன்று வாயால் சொல்லிப்போனதை செயலில் நிறைவேற்றி வைத்தார் சாம்பு! நாளும் பொழுதும் 'சப்பட்டை' கட்டிக்கொண்டு வந்துவிட்டன - ஒரு நாள் சியாமளாவின் வீணைப் பாட்டு இசைத்தட்டேறியது. இசைத்தட்டின் மேலே காணப்படும் அடர்த்தியான மெல்லிய கோடுகள் போல பல யோசனைகள் அவள் மனதிலே. ஆனால் கோடுகளுள் மறைந்து கிடந்த பண் தன்னைப்போல, அந்த யோசனைகளின் ஆழத்திலே ஒரு அலாதி சந்தோஷமும் பண்ணிசைத்துக்கொண்டு இருந்தது. கணவன் அசிரத்தையாகவே ஓரிரண்டு தடவை சாம்புவின் 'வாய்ப்பேச்சை' விமரிசனம் செய்ததைக் கேட்டிருந்தாள். அல்லவா? அதனால்தான் யோசனைகள். ஆனால் சாம்பு 'வாய்ப் பேச்சை' செயலிலும் நிறைவேற்றியதால், 'வெறும் பேச்சாக' இல்லாமல் மனப்பூர்வமான ஆர்வமுடன் தனக்கு ஆதரவு கொடுத்ததால்தான் மகிழ்வதிலே நூறிலே ஒரு பங்கு கணவனுக்கு இருக்கும், என்ற எண்ணம், சியாமளாவை கவலையில்லாமல் சாம்புவின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செய்தது.

விஷயத்தைக் கணவனுக்கு எழுதி போட்டாள் -இசைத்தட்டு வெளியானதும்.

•• •• ••

ஆனால் அவள் கடிதம் வருமுன் ராஜாராமன் சங்கதி அறிந்தான்.

இசைத் தட்டுக்கள் விற்பனையாகும் சிறு கட்டிடம் இருக்கும் வழியே அதைத் தாண்டிக்கொண்டு போய்க் கொண்டிருந்தான் ராஜாராமன். உள்ளே ஒரு பெண் குரல், இசைக் கருவி மூலம் ஒலித்தது.

"எந்தத் தெருவிலும் எந்த ஓட்டலிலும் முழங்க வேண்டுமா ஒரு பெண்ணின் குரல்? அவமானம்! அவளையும் ஆசை காட்டினாரே மாமா!" என்று எண்ணிக்கொண்டே போய்க்கொண்டிருந்தான்.

யாரோ அவனுடைய பெயரைச் சொல்லி கூப்பிட்டார்கள். திரும்பிப் பார்த்தான். கையசைப்பைக் கண்டு கூப்பிட்டவரை அணுகினான். இசைத் தட்டுகள் விற்பனை செய்யும் கடைக்காரர்தான் கூப்பிட்டவர். இருவருக்கும் பரிச்சயம் உண்டு. முதுகைத் தட்டிக் கொடுத்துக்கொண்டே ராஜாராமனை உள்ளே கூட்டிச் சென்றவர், இவன் திடுக்கிடும்படியாக இவனுக்கும், சியாமளாவுக்கும் வாழ்த்து கூறினார். எதற்கு வாழ்த்துக்கள்? இசையுலகில் ஸ்ரீமதி சியாமளா ராஜாராமன் தோன்றுவதைப் பற்றித்தான். இசைத் தட்டுகள் வெளிவராவிட்டாலும், அவை விற்பனைக்கு விரைவில் வெளிவரப் போவதாகச் சொல்லிவிட்டார் தகவல்; மலரவேண்டிய ராஜாராமன் முகம் சுண்டிக் குவிந்தது.

இரண்டு நாட்களுக்குப் பிறகு மனைவியின் கடிதம் விஷயத்தை ஊர்ஜிதம் செய்தது. அன்று யாரோ பெண்ணைப் பற்றி அவன் விமர்சனம் செய்திருக்க, தன் மனைவியே அதுபோல ஒரு விமர்சனத்திற்கு ஆளாகிவிட்டாள் என்பதைத் தாங்கமுடியவில்லை.

"எந்த மூலை முடுக்கிலும், சந்து பொந்திலும் உன் குரல் முழங்க வேண்டுமா? நாலு பேர் வாயிலே நீ நுழைந்து புறப்பட வேண்டுமா? அவமானமில்லையா?" என்று கடுமை தொனிக்க கடிதம் எழுதிப் போட்டான் ராஜாராமன்.

"'கலை வாழணும், பெயர் வரணும்' என்றெல்லாம் எண்ணினால், இதையெல்லாம் பார்க்க முடியுமா? என் பாட்டு எவ்வளவு விருத்தியடையும் இனிமேல், பாருங்கள்!" என்று சமாதானம் வெகு சாவதனமாகக் கூறியிருந்தாள் சியாமளா, பதிற் கடிதத்திலே.

"உன் கலையையே கட்டிண்டு அழு. உன் பாட்டு எவ்வளவு விருத்தியடையுதோ பார்க்கிறேன்!" என்று கொடுமையாக அதற்கு விடை கூறிவிட்டு ராஜாராமன், அவளுடன் வாழ்க்கை நடத்துவதிலிருந்து விடுதலை தனக்கு வேண்டும் என்று தெரிவித்துவிட்டாள்.

கணவனின் கொடுமை எண்ணத்தை நம்ப முடியாமல் சியாமளா ஊருக்குப் புறப்பட்டு வரத் துடித்தாள்; கணவனை வந்தடைய ஆத்திரப்பட்டாள்.

ஆனால் அவளுடைய தந்தை தடுத்தார். மற்றொரு கடிதமூலம் உண்மை விஷயம் அறியத் தூண்டினார். உண்மை, சியாமளாவுக்குப் பேரிடியாயிற்று, உறுதியாக.

சாம்பு இதை அறிந்து அதிர்ந்து போனார்.

"ஐயோ, இந்தப் பாவத்தை எங்கே கொண்டு தொலைப்பேன்?' என்று மனம் புழுங்கினார், பாவம்!

"அப்பா! ராஜாராமா!.. உனக்கு இந்த எண்ணம் கூடாது! அனாவசியமாக ஒரு பெண்ணின் வாழ்நாள் குலைவதா?" என்று பெற்றோரிடமிருந்து கடிதம் வந்தும், ராஜாராமன் மனந்தளர்ந்து கொடுக்கவில்லை.

"அவளுடைய உறவு எனக்கு இப்போது அவசியமில்லை!" என்று பல்லைக் கடித்தான்.

•• •• ••

"வாப்பா சினிமாவுக்குப் போகலாம்; மனசுக்கு உனக்கும், எனக்கும் சந்தோஷமாயிருக்கும்!" என்றான் நண்பன் கிட்டு.

"எனக்கு என்னப்பா மனசுக் கஷ்டம் இப்போ! நீதான் இறந்த மனைவியை நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கிறவன், எனக்கொன்றும் வருத்தம் கிடையாதப்பா!" என்றான். ராஜாராமன் மிடுக்குடன். என்னதான் மிடுக்காகப் பேசினாலும், அவன் குரலில் கணிப்பு இல்லை. விரிந்த பாத்திரம் எழுப்பும் ஓசைபோல ஒலித்தது குரல்.

"போகிறது - என் நட்பிலேதான் உனக்கு ஆறுதல் கிட்டட்டுமே, வரேன் உன்கூட!" என்று சொல்லிக்கொண்டு, கிட்டுவுடன் சென்றான்.

"எனக்கு இப்போ வருத்தமாயிருக்கப்பா, நினைச்சால்! அவளை நினைச்சால்! அவளை ஏதாவது சினிமாவிலே நடக்க வச்சிருந்தாலாவது, சினிமாவைப் பார்த்துப் பார்த்து, அவள் நடக்கறதையும், பேசறதையும் சிரிக்கிறதையும் பார்க்கலாமோல்லியோ?" என்றான் கிட்டு, திடுக்கென்று.

"என்ன! என்ன சொன்னாய்?" என்று திடுக்கிட்டுக் கேட்டான் ராஜாராமன், "மூளை கீளை கெட்டுவிட்டதா?" என்றான் அடுத்து.

"முந்திதான் மூளைக் கெட்டுவிட்டிருந்ததென்று நினைக்கிறேன். நீ சாமர்த்தியக்காரன். மனைவியின் குரலையாவது பதிவு செய்துவிட்டாய்; நான் மூளைகெட்டவன் என்று உனக்குத் தோன்றுவது தப்பேயில்லை!" என்றான் கிட்டு. தன் மனைவி சியாமளாவைத் துறந்துவிட்டதாக நாலு பேருக்கு இன்னும் தெரியாது என்பதை ராஜு அறிந்திருந்தான். 'மனசு சந்தோஷமாயிருக்க,' என்று கிட்டு சினிமாவுக்கு அழைத்தபோது, 'பிரிவாற்றாமையை மறக்கத்தான் தன்னைக் குஷிப்படுத்துகிறான்,' என்பதை ஒருவாறு அவன் ஊகித்திருந்தான். நண்பன் மனப்பூர்வமாக மனைவியை இழந்த சோகத்தில்தான் அவ்வாறு பேசுகிறான் என்பதை எண்ணும்போது அவனை அறியாமல் ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது நெஞ்சினின்று.

'சினிமாத் தொழிலைப் பற்றியும் நடிகர் நடிகைகளைப் பற்றியும் எவ்வளவு இழிவாகப் பேசி வந்தவனா மனைவி இறந்ததும் இந்த மாதிரி வருந்துகிறான்?" என்று தன்னையே கேட்டுக் கொண்டான்.

'அவளுடைய குரல், அசரீரியாக அவள் கீதமிசைப்பது இசைத் தட்டிலேப் பதிந்தது ஒரு இழிவா? குற்றமா? என்ன தவறு அவள் செய்துவிட்டாள்?' என்று குத்திக் காட்டியது அவனுடைய இதயரங்கம், மனைவியை நினைப்பூட்டிவிட்டு.

நாலுபேருக்குத் தன் 'பொல்லாத்தனம்' தெரியும்முன் அவளை - மனைவியை - வரவழைத்துவிட அசையா உறுதி கொண்டது அவன் உள்ளம். நல்ல விஷயத்திலே பிடிவாதத்தைத் தளர்த்தித் தழைந்துபோவது நல்லது என்ற அறிவுடன் நடந்து கொண்டான்.

அவனுக்கு அந்த அறிவைக் கொடுத்ததற்குக் கடவுளுக்கு நன்றி கூற வேண்டுமா? அல்லது, சாம்புவின் நல்ல பெயருக்கு இழுக்கு ஏற்படாமல் தம்பதிகளை ஒன்று சேர்த்ததற்குக் கடவுளைப் போற்ற வேண்டுமா?

பாவம், சாம்பு எத்தனையோ முயற்சிகளில் வெற்றிகண்டவர்தான் ஆனால் ராஜாராமன் விஷயத்திலே தோல்வி கண்டதைப் பற்றி அவருக்கு வருத்தம்தான். 'இழுக்கு' வராமல் தப்பித்தார்; ஆனால் பெருமை வரும்படி ஒன்றும் செய்ய முடியவில்லையே!

"ஓய்! நீர் ராஜாராமனைப் பற்றி வருத்தப்பட்டுக் கொண்டிருந்ததை அறிந்துதான், நான் அந்த 'எத்து' பண்ணினேன்! போன என் மனைவியைப் பற்றி எனக்கு அந்த மாதிரி சினிமாவில் சேர வைக்கலையே என்று வருத்தம் கிடையாதுங்காணும். ஆனாலும் சினேகிதன் மனசு மாற அப்படிச் சொன்னேன்! பொல்லாப்பு வராமல் பிழைச்சுப்போம்!" என்று கிட்டு மானஸீகமாக தம்முடன் சொல்வதை உணர்ந்தால், சாம்பு சந்தோஷிப்பாரா, வருத்தப்படுவாரா? எப்படியும் அவர்கள் ஒன்றுபட்டதற்கு மூலகாரணம் தாம்தான் என்று சொல்லி கொண்டு பெருமைப்படுவாரா?

சாம்பு நல்லவர். பெருமைபடாவிட்டாலும். கடவுளின் அருளை எண்ணி, ராஜாராமன் தம்பதிகளை ஆசீர்வாதம் பண்ணிக்கொண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார். நல்ல மனதின் போக்கு இதுவேயன்றோ?

**********

(வெள்ளிமணி சிறுகதை, ஏப்ரல் 1, 1948)